MCOP.No. 117/2021
Date : 17.09.2025
Rw – 1
பெயர்: மெய்யர்
த/பெ: முத்தையா

<u>குறுக்கு விசாரணை</u>

தாவா விபத்து சம்மந்தமாக நானோ என்னுடைய நிறுவனத்தினரோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோமா என்று கேட்டால் விபத்து நடந்த சமயத்தில் நானும், இளநிலை பொறியாளரும் சேர்ந்து விபத்து சம்மந்தமாக கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். தாவா விபத்து சம்மந்தமாக எனக்கு எதிராக தான் கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் நான் அரசு பேருந்தை மிதமான வேகத்திலும், சாலை விதிகளை கடைப்பிடித்தும், இயக்கியதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் TN55 N0586 அரசு பேருந்தை நான் தான் அதிகவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பணிபுரியும் நிறுவனத்திற்கு சகாயம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்பவம் சம்மந்தமாக என் மீது துறைரீதியான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

Sd/–மெய்யர்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.